ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1680/29 - 2010 නොවැම්බර් 19 වැනි සිකුරාදා - 2010.11.19

*1680/29 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்*

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிக்கு 2011.01.01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் பின்வரும் புதிய திருத்தங்களைச் செய்கிறேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2010, நவெம்பர் 19.*

**ஒழுங்குவிதிகள்**

*1. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதியின் 4 ஆம் விதிக்கு உடனடுத்துப் பின்னர் புதிய ஒழுங்குவிதி உட்புகுத்தப்படுவதுடன், குறித்த ஒழுங்குவிதியின் 4 (அ) ஒழுங்குவிதியாக பயன்வலுப்பெறுதல் வேண்டும்.*

*"4 (அ) குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு ஏற்புடைத்தான உள்வரும் சர்வதேச அழைப்புகள் தொடர்பாக அறவீடு இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இன் வகுதி அ (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்திலும் அத்தகைய காலப்பகுதிக்கும் அறவிடப்படுதல் வேண்டும்".*

*2. ஒழுங்குவிதி 7 பின்வருமாறு திருத்தப்படுகின்றது :*

*"அத்துடன் அட்டவணை I இன் வகுதி அ (i) நியதிகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கான கட்டணம்" என்ற சொல்லின் உடனடுத்துப்பின்னர்.*

*"அட்டவணை I இன் வகுதி இ நியதிகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தின் 50% (ஐம்பது சதவீதத்தினை) ஆணைக்குழு அனுப்பி வைத்தல் வேண்டும்" என்ற சொல்லை உட்சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது.*

*3. ஒழுங்குவிதி 8 பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(அ) " அட்டவணை I இன் வகுதி இ நியதிகளின் கீழ் சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தில் எஞ்சியுள்ள ஐம்பது சதவீதத்தினை (50%) பொருத்தமானதாகக் கருதுகின்றவற்றில் பயன்படுத்தவும் அல்லது அதனை செலவிடுவதற்கும் ஆணைக்குழுவிற்கு முடியும்" என்ற சொல்லினை உடனடுத்து பின்வரும் சொற்களை உட்சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது.*

"அத்துடன் அட்டவணை I இன் வகுதி அ (i) நியதிகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கான கட்டணம்"

4. ஒழுங்குவிதி 9 இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் புதிய பந்தி ஒழுங்குவிதி 9 ஆகக் கொள்ளப்படும் :-

**வெளிச் செல்லும் உள்நாட்டுப் பெறுகை அழைப்புகள் மீதான அறவீட்டுக் கட்டணம் :**

"(8) வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புகள் தொடர்பான அறவீடு (வெளிச்செல்லும் உள்நாட்டு பெறுகைக் கட்டணம் என இதனகத்துப்பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) இந்த ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இன் வகுதி ஈ இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலம் மற்றும் வீதத்திற்காக அறவீடு செய்யப்படுதல் வேண்டும்."

5. ஒழுங்குவிதி 9 இன் உடனடுத்துப் பின்னர் ஒழுங்குவிதி 9 (A) இனை உட்புகுத்துவதன் மூலம், 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகளின் 9 (அ) ஒழுங்குவிதியொன்றாக பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

"9 (அ) அட்டவணை I இன் வகுதி ஈ நியதிகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட வெளிச் செல்லும் உள்நாட்டுப் பெறுகை அழைப்புகள் மீதான கட்டணம் ஒழுங்குவிதி II இல் குறிப்பீடு செய்யப்பட்ட உரிய திகதியிலிருந்து 15 வேலைநாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது அன்று திரட்டிய நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்."

6. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீட்டு (விதிப்பனவு) ஒழுங்குவிதியின் ஆங்கில மொழிபெயர்ப்பின் அட்டவணை I இன் "வகுதி ஆ" என்ற சொல் "வகுதி இ" எனத் திருத்தப்படுதல் வேண்டும்.

7. ஒழுங்குவிதி 25 இல் பொருள்கோடல்கள், என்பதில் "வட்டி வருமானம்" என்ற சொல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"அத்துடன் குறிப்பீடு செய்யப்பட்ட இலக்கங்கள்" என்ற சொல், "வட்டி வருமானம்" என்பது தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணத்தின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம் எனப்படும்" என்ற சொல்லின் பின்னர் புகுத்தப்படுவதன் மூலம் திருத்தப்படும்.

8. "உள்நாட்டு பகிரங்க ஆளியிட்ட தொலைபேசி வலையமைப்பு இயக்குநர்களுக்குச் செலுத்தப்பட்ட வெளிச்செல்லும் உள்நாட்டு பெறுகைக் கட்டணம்" என்ற நிரல் 3 இல் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் அறவீடு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகளின் அட்டவணை II இன் அமைப்பு பிறப்பாக்கல் ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட "ஒவ்வொரு சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்களிலிருந்தும் செலுத்துவதற்கு நிலுவையாக உள்ள வெளிச்செல்லும் உள்நாட்டு பெறுகைகள் கட்டணம்" இத்தால் நீக்கப்படுகின்றது.

9. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குநர் அறவீடு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகளின் "உள்வரும் சர்வதேச அழைப்புகள் மீதான செலுத்த வேண்டிய அறவீட்டு வீதம்" என்ற அட்டவணை I இன் வகுதி அ இன் உடனடுத்துப் பின்னர் பின்வரும் வகுதி அ (i) இனை உட்புகுத்தல்.

**அட்டவணை I**

வகுதி அ (i)

(ஒழுங்குவிதி 4அ, 7,8)

குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கான கட்டணம் மீதான உள்வரும் சர்வதேச அழைப்புக்கள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய அறவீட்டு வீதம்.

| வருடம் | காலம் | தொலைபேசி இலக்கமொன்றுக்கு/ மாதமொன்றிற்கு அறவீடு அ. டொ. | 1500 க்கு மேற்பட்ட நிமிடங்களுக்கு மாதமொன்றுக்கான அறவீடு (ஐ. அ. டொ. சதம்) | |
|---|---|---|---|---|
| 2011 | 01.01.2011- 31.12. 2011 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் | 1.50 |
| 2012 | 01.01.2012- 31.12. 2012 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் | 1.50 |
| 2013 | 01.01.2013 - 31.12. 2013 | 3.00 | ஒவ்வொரு மேலதிக நிமிடத்திற்கும் | 1.50 |

10. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குநர் அறவீடு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் "தொலைத்தொடர்புகள் அபிவிருத்தி அறவீடு என்ற வகையில் செலவிடல் அறவீட்டு வீதம்" தொடர்பாக அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட வகுதி ஈ இனை உடனடுத்துப்பின்னர் பின்வரும் வகுதி இ இனை உட்புகுத்தல் மூலம் ;

(ஒழுங்குவிதி, 7,8,9)

**வகுதி ஈ**

வெளிநாட்டு பெறுகை அழைப்புகள் மீதான கொடுப்பனவு அறவீட்டு வீதம்

| வருடம் | காலம் | நிமிடமொன்றுக்கு கட்டணம் (ரூபா) இலங்கை ரூபாவில் |
|---|---|---|
| 2011 | 01.01.2011- 31.12. 2011 | 2.00 |
| 2012 | 01.01.2012- 31.12. 2012 | 2.00 |
| 2013 | 01.01.2013 - 31.12. 2013 | 2.00 |

11. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குநர் அறவீடு (விதிப்பனவு) ஒழுங்குவிதிகள் அட்டவணை II இல் குறிப்பீடு செய்த " அமைப்பு மாற்றல்" என்ற வகுதியின் உடனடுத்துப்பின்னர் பின்வரும் வகுதிகளை புகுத்துதல்,

***அட்டவணை II***

குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இலக்க இணைப்புகள்

(ஒழுங்குவிதி 1, 13)

| முடிவுறுத்தப்பட்ட அமைப்பு வலையமைப்பு இயக்குநர் | இணைக்கப்பட்ட குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இல. எண்ணிக்கை | மொத்த அடைவு நிமிடங்கள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

| சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் | இணைக்கப்பட்ட குறிப்பீடு செய்யப்பட்ட தொலைபேசி இல. எண்ணிக்கை | மொத்த அடைவு நிமிடங்கள் |
|---|---|---|
| இயக்குநர் அ | | |
| இயக்குநர் ஆ | | |

12- 289

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.